செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 322 நாள் : 4/6/18

<u>பத்திரிகைச் செய்தி</u>

மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் அமைச்சகம் 6000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், உணவு பதப்படுத்தும் திட்டம் 2016-2020ம் ஆண்டு வரை செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்படி மத்திய அரசின் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம், வேளாண் உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் செயலாக்க கூட்டமைப்புகளை உருவாக்குதலுக்காக, மானியம் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் நாட்டின் உணவு பதப்படுத்தும் துறை வளர்ச்சி வாய்ப்பில் பெருமளவு ஊக்கத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல், சிறந்த வருமானம் புதிய வேலை வாய்ப்புகள், விவசாய விளை பொருள் வீணாக்கத்தை குறைத்தல், பதப்படுத்தும் திறனை அதிகரிப்பது மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதியை அதிகரிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ், தமிழகத்தில் ஐந்து வேளாண் செயலாக்க கூட்டமைப்பு அமைக்க, மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 35 சதவித மான்யத்தில் அதிக பட்சமாக ஒரு திட்டத்திற்கு, 10 கோடி ரூபாய் நிதி மானிய தொகையாக வழங்கப்படவுள்ளது. ஒருங்கிணைந்த குளிர் சங்கிலி மேம்பாடு மற்றும் மதிப்பு கூட்டுதல் போன்ற உட்கட்டமைப்புகளை உருவாக்கத்திற்கு இத்திட்டத்தினை பயன்படுத்தலாம். அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவியை பெறலாம்.

இத்திட்டத்தை துவங்க ஆர்வம் உள்ளவர்கள், வேளாண்மை துணை இயக்குநர், (வேளாண் வணிகம்) வேலூர், அவர்களை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வேளாண்மை துணை இயக்குநர்
(வேளாண் வணிகம்) வேலூர்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.

ம.செ.ம.தொ.அ.
வேலூர்– 9.